1981 பிப்ரவரி 27]

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, காமராஜர் அவர்கள் 3 மணி நேரம் பேசமாட்டார். ஆனால் நமது முதல் அமைச்சர் 8 மணி நேரம் கூட பேசுகிறார். எனவே இந்த அறிக்கையை அவர் வந்து படிக்கட்டும். You ask the Chief Minister. Send a summon to him and bring him. அவை முன்னவரே அறிக்கையைப் படிக்க விடமாட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறிக்கையைப் படிக்க விடமாட்டேன் என்று சொல்ல எந்த உறுப்பினருக்கும் உரிமை கிடையாது.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, இங்கே தலைவர் காமராஜரைப் பற்றி சொல்லி இருக்கிறீர்கள். ஆனால் காமராஜர் அவர்கள் காலை 9 மணி முதல் 1—30 மணி வரையில் இந்த அவையிலே வந்து இருப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தச் சபையிலே இப்படிப்பட்ட முறைகள் எல்லாம் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளன. முதல்வருக்குப் பதிலாக அவை முன்னவர் அறிக்கை படிப்பது தப்பல்லஅதைத் தடுப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இன்றைக்கு அல்லது ஒரு நாளைக்கோ நடந்தால் பரவாயில்லை. திட்டமிட்டே கேள்விக்குக் கூட பதில் சொல்வது கிடையாது.

5. திருத்த அறிக்கைகள்

(அ) ஐந்தாவது உலகத் தமிழ்மாநாட்டைப் பொட்டிய திரைப் படச் செலவு—அவை முன்னவர்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சார்பாக நான் இந்த அறிக்கையை அவை முன் வைக்கிறேன்.

‘ சட்டமன்றப் பேரவையில் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 4-ஆம் நாள் அன்று ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தின்போதும், பின்னர் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 6-ஆம் நாள் அன்று துணை நிதி அறிக்கையின் மீதான விவாதத்தின்போதும், ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டிற்கு அரசு செய்த செலவு பற்றிய விவரங்களை நான் குறிப்பிடும்போது என்னிடமுள்ள தகவல்படி ‘ குமரிக் கண்டம் ’ திரைப்படத்திற்கான செலவு ரூ. 3 லட்சம் என்று குறிப்பிட்டேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 பிப்ரவரி 27

அதனைக் கீழ்க்கண்ட விளக்கக் குறிப்புகளின் அடிப்படையில் திருத்தி ஏற்றுக்கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன்.

திரைப்படம் எடுக்க ரூ. 3 லட்சம் செலவழிக்கப்பட்டது என்பது ஏழு நாட்கள் நடைபெற்ற மாநாட்டோடு தொடர்புடைய அனைத்து நிகழ்ச்சிகளையும் செய்தித் திரைப்படம் (டாகுமென்டரி) எடுக்க செலவழிக்கப்பட்ட தொகையாகும்.

'குமரிக் கண்டம்' திரைப்படத்தை சினிமாஸ்கோப் பிரதி தமிழில் 1-ம், சினிமாஸ்கோப் பிரதி ஆங்கிலத்தில் 1-ம், 35 எம். எம். கலர் பிரதிகள் தமிழில் 7-ம், 35 எம். எம். கலர் பிரதிகள் ஆங்கிலத்தில் 2-ம் ஆக 11 பிரதிகளாக எடுக்க ஆன மொத்த செலவு ரூ.. 9.50 இலட்சமாகும்.

*டர்க்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, உங்களுடைய நினைவிற்கும், அவை முன்னவர் அவர்களின் கவனத்திற்கும் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். இதே அவையில், நம்முடைய அவை முன்னவர் அவர்கள் அமைச்சராகப் பொறுப்பேற்று இருந்தபோது, அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, விவசாயிகள் பிரச்னை குறித்து அண்ணா அவர்கள் முதல் நாள் ஒரு தகவல் சொல்லி, மறு நாள் முதலமைச்சர் அண்ணா அவர்கள் அந்தத் தகவலைத் திருத்தி இந்த அவையில் அறிக்கை வைக்கின்ற நேரத்தில், முதல் நாள் சொன்ன தகவலுக்காக வருந்துகிறேன் என்று சொல்லி வருத்தம் தெரிவித்தார்கள். ஆனால், இங்கே இப்படிப்பட்ட பெரிய தவறைச் செய்து விட்டு, துரைமுருகன் அவர்கள் சுட்டிக்காட்டியபோது அவரை கேலியும், கிண்டலும் செய்து விட்டு, சொல்வது தவறு என்று துரைமுருகனை இழித்தும் பழித்தும் பேசிவிட்டு, இப்போது திருத்தம் கொடுக்கிற நேரத்தில் தவறுக்காக வருந்துகிறேன் என்று முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடாமல் இருப்பது உள்ளபடியே வருந்தத்தக்கதாய் உள்ளது.

(ஆ) முல்லையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் கட்டுவது—நீர்ப்பாசனத்துறை அமைச்சர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 107-ன் கீழ் ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இப்பேரவையில் 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 7 ஆம் நாள் அன்று, கன்னியாகுமரி மாவட்டத்தில் முல்லையாற்றின் குறுக்கே பள்ளிக்கூடம் என்னுமிடத்தில் நீர்த்தேக்கம் கட்டுவது சம்பந்தமான கேள்விக்கு பதிலளிக்கையில் திரு. டி. மணி அவர்களின் துணைக் கேள்விக்கு கீழ்க்கண்டவாறு பதிலளிக்கப்பட்டது.